## ஸ்ரீலங்கா இராணுவத்தின் தொல்லையின் எல்லையில் ஈழத்தமிழர்
# கப்பல் அனுப்பிக் காப்பாற்றக் கோரிக்கை


பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 2-50

# முரசொலி

முரசு 04 ஒலி 147 செவ்வாய் 10-07-1990 (ஆனி 26) துல்ஹஜ் 16


"இலங்கையின் வடக்குக், கிழக்குப் பகுதிகளில் தொடர்ந்து நடைபெற்றுவரும் ஸ்ரீலங்கா அரச படைகளின் உக்கிரத்தாக்குதலின் விளைவாகக் கதி கலங்கிப் போயிருக்கும் தமிழர்கள் ஏராளமானோர் தமிழகத்தில் அடைக்கலம் தேடத்துடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை இங்கு அழைத்து வந்து அவர்கள் உயிரைக் காப்பாற்ற இந்திய அரசு கப்பல்களை அனுப்பி உடனடியாக உதவவேண்டும்" மேற்கண்டவாறு தமிழகத்தில் தற்போது அகதிகளாக வந்து தஞ்சமடைந்துள்ள அகதிகள் கோரிக்கை விடுத்துள்ளதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது. இதுவரை தமிழகத்தில் 10,900 அகதிகள் அடைக்கலம் புகுந்துள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. கடந்த ஏழு நாட்களில் மாத்திரம் ஆறாயிரம் அகதிகள் தமிழகம் வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

— 04 ஆம் பக்கம் பார்க்க

# தமிழர் நியாயம் இலங்கை உணர்தல் அவசியம்!

"இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு நியாய பூர்வமான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதை அந்நாட்டு அரசு உணர வேண்டும். உணரும் என்ற நம்பிக்கை இந்தியாவுக்கு உண்டு" என்று இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. இந்தர்குமார் குஜ்ரால் தெரிவித்துள்ளார்.

நேற்று புதுடில்லியில் வைத்து தமது இக்கருத்தை அவர் வெளியிட்டார்.

"இலங்கையில் தமிழர்கள் துன்பப்படுவதையிட்டு இந்தியா மிகுந்த கவலை கொண்டுள்ளது. இந்நிலை தொடரக் கூடாது என்பதே இந்திய அரசின் விருப்பமாகும்" என்றும் அவர் சொன்னார்.

தமிழர்கள் தொல்லைகள் நிமித்தம் வெளியேறி இந்தியாவுக்கு பெருமளவில் வருவதை இலங்கை அரசு தவிர்க்கவேண்டும் என்று புதுடில்லி வந்த இலங்கை வெளியுறவுச் செயலாளர் திரு. பேர்னாட் திலகரத்னவிடம் தான் கேட்டுக்கொண்டதாகவும் திரு. குஜ்ரால் தெரிவித்தார்.

"இலங்கை துண்டாடப்

— 04 ஆம் பக்கம் பார்க்க

### முரசொலி வாசகர்களுக்கு

அச்சுத்தாள், எரிபொருள் தட்டுப்பாடு போன்ற இன்னோரன்ன பிரச்சனைகளால் முரசொலியின் விலையை 11-7-90 முதல் மீண்டும் 3 ரூபாவாக மாற்றவேண்டிய கட்டாயத்திற்குள்ளாக்கப் பட்டுள்ளோம் இப்போதுள்ள சூழ் நிலையில் தவிர்க்க முடியாத இவ் விலை மாற்றத்தை ...றுக் கொண்டு வாசகர்களாகிய உங்கள் ஆதரவைத் தொடர்ந்தும் வழங்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

-நிர்வாகத்தினர்

## இந்தியாவுக்குச் செல்லக் காரணம்

ஸ்ரீலங்கா இராணுவம் தள்ளாடி முகாமில் இருந்து வெளியேறி விட்டது போன்ற

—04ஆம் பக்கம் பார்க்க

### புலிகள் குற்றச் சாட்டு; திருமலையில்

## உயிரோடு எரித்து தெருவோரம் தமிழர்சடலங்கள்வீசப்படுகிறது

திருகோணமலையில் இராணுவத்தால் கைது செய்யப்படும் தமிழர்கள் உயிரோடு எரித்துக் கொல்லப் படுகிறார்கள் என்று தமிழீழ விடுதலைப்புலிகள் லண்டனில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களின் சடலங்கள் தெருவோரம் போடப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தமதுபலத்த தாக்குதலைத் தொடர்ந்து இரு இடங்களில் இம்மாவட்டத்தில் 26 மாற்றார் கொல்லப்பட்டதாகவும் கூறப்பட்டது.

ஸ்ரீலங்கா அரசு தமிழர்

—04ஆம் பக்கம் பார்க்க

## குடாநாட்டு மினிபஸ்சேவை விஸ்தரிப்பு விபரங்கள்

யாழ் குடாநாட்டிற்கான மினிபஸ் சேவைகள் மேலும் விஸ்தரிக்கப் பட்டுள்ளன. தற்போது நடைபெறும் மினிபஸ் சேவைகளின் விபரங்கள் வருமாறு:

கீரிமலை (788) மினிபஸ் சேவைகள்; ஐந்துசந்தி ஆனைப்பந்தி நல்லூர் ஊடாகவும் தீவுப்பகுதிகளுக்கான மினிபஸ் சேவைகள் (779) அராலி

—04 ஆம் பக்கம் பார்க்க

### பி. பி. ஸி நிருபரிடம் மட்டு. தளபதி கரிகாலன்

## மக்களாதரவின் முன் விமானத் தாக்குதல் எம்மாத்திரம்?

"தற்போது நடைபெறும் யுத்தத்தை ஆரம்பித்தவர்கள் ஸ்ரீலங்கா காவல்துறையினரே. நாம் அல்ல" இவ்வாறு விடுதலைப் புலிகளின் மாவட்டத் தளபதி கரிகாலன் பி. பி. ஸி நிருபர் கிறிஸ்மொறிஸனுக்கு மட்டக்களப்பில் வைத்து அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

"மட்டுநகரில் நகரப்புறத் தாக்குதலை மேற்கொள்ளாமைக்குக் காரணம்நகர்ப்புறத்தில் மோதல் மூண்டால் பொதுமக்களுக்கே பாதிப்பு அதிகமாகும். இதனால் நாம் கிராமப் புறங்களுக்கு சென்று அங்கிருந்து கெரில்லாத் தாக்

— 04ஆம் பக்கம் பார்க்க

## இந்தியஅரசு வாளாவிருப்பதா? இ. காங்கிரஸ் கண்டனம்

"இலங்கையில் தொடர்ந்து நடைபெற்று வரும் இனப் படுகொலையை இந்திய அரசு வெறுமனே பார்த்துக்கொண்டிருக்கக் கூடாது' என்று இந்திரா காங்கிரஸ் தமிழ்நாடு தலைவர் வாழப்பாடி ராமமூர்த்திகூறியுள்ளார்.

சென்னையில் நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் அவர் இது பற்றி மேலும்

—04 ஆம் பக்கம் பார்க்க

## லட்சக்கணக்கில் நிதி குவிகிறது; பிக்குகள் முன்னிலை

தேசிய பாதுகாப்பு நிதிக்கு இலட்சக்கணக்கில் பணம் நாளாந்தம் குவிந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மாணவர், ஆசிரியர், தனியார், அரச ஊழியர்கள் என்று பலதரப்பட்டோரும் இதற்கு உற்சாகத்துடன் உதவுகின்றனராம்.

—04 ஆம் பக்கம் பார்க்க

## பலாலியிலிருந்து

நேற்றிரவு பலாலி முகாமில் இருந்து நகரை நோக்கி பல தடவை ஷெல் பிரயோகம் செய்யப்பட்டது. சேத விபரம் தெரியவில்லை.

## தடைகளைத் தாண்டி முன்னேற ராணுவம் முயற்சி

அனுராதபுரத்திலிருந்து ஆனையிறவை நோக்கி ஸ்ரீலங்கா இராணுவம்பெரும் எடுப்பில் முன்னேறிவருகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகள் பாதைகளில் வைத்துள்ள கண்ணிவெடிகள், மிதிவெடிகள் முதலான தடைகள் பலவற்றையும் தாண்டி இராணுவம்

—04 ஆம் பக்கம் பார்க்க

## போரினால் இதுவரை 1400 பேர் மடிவு என அறிவிப்பு

கடந்த மாதம் 11ம் திகதி தொடங்கிய அரசு-விடுதலைப் புலிகள் யுத்தத்தினையடுத்து இது வரை 1400 பேர் வரை கொல்லப்பட்டுள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது.

இதனை அதிகார பூர்வவட்டாரங்களும், வெளித்தகவல்களும் தெரிவித்துள்ளதாகவும் இந்திய வெகுசனத் தொடர்பு சாதனங்கள் நேற்றுக் கூறின. (ஸ்ரீ)

## இன்று

இன்று காலை 10 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவிருக்கும் யாழ்-பல்கலைக்கழக மாணவர்களின் பொதுக் கூட்டத்தில் தமிழீழவிடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் திரு.மாத்தயா கலந்து கொள்ளவுள்ளார்.

## தமிழகப் பெற்றோல் இங்கு புழக்கம்

தற்போது குடாநாட்டில் நிலவிவரும் எரிபொருள் தட்டுப்பாட்டின் எதிரொலியாகத் தமிழகத்திலிருந்து பெற்றோல் கடத்தி வரப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடல் மார்க்கமாக பெற்றோல் குடாநாட்டுக்குள் கொண்டுவரப்படுவதாகவும் ஆயினும் லீற்றர் விலை நூறைத்தாண்டியே உள்ளதாகவும் அறியவருகிறது.

(ஸ்ரீ)

## சிறிய செய்திகள்

### சாவகச்சேரிக்கு வைத்திய அதிகாரி நியமனம்

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை வைத்திய அதிகாரியாக வட பிராந்திய தொற்று நோயியல் அதிகாரியும் சாவகச்சேரி பதில் சுகாதார வைத்திய அதிகாரியுமான வைத்திய கலாநிதி தாமோதரம்பிள்ளை சிவபாதம் யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இங்கு முன்னர் கடமையாற்றிய டாக்டர் தா. சோமசுந்தரம் அவர்கள் புலமைப்பரிசில் பெற்று வெளிநாடு சென்றமையால் இப்பதவி நிரப்பப்படாமல் இருந்தது.

### பரீட்சை ஒத்திவைப்பு

திறந்த பல்கலைக்கழகத்தில் கடந்த 17-ந் திகதி நடைபெறவிருந்த தொழில்நுட்ப டிப்ளோமா மற்றும் பி. எஸ். சி. ஆங்கில தராதரப் பரீட்சைகள், வினாத்தாள்கள் வந்து சேராததன் காரணத்தால் நடைபெறவில்லை என்றும், மறு அறிவித்தல் வரை இவை பிற்போடப் பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலை காரணமாக புதிய மாணவர்களுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்க முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4, 64கி)

### காவலூரில் மின்சாரம் இல்லை

(காவலூர்)

ஊர்காவற்றுறையை நோக்கி தினமும் காரைநகர் கடற்படையினர் கடலில் இருந்து பீரங்கித் தாக்குதல்களைமேற்கொண்டு வருகின்றார்கள்,

இதனால் இப் பகுதியில் உள்ள பல கட்டிடங்கள் சேதமடைத்துள்ளன. பட்டினப் பகுதியில் இருந்து மக்கள் இடம் பெயர்ந்துள்ளதனால் உயிர்ச் சேதங்கள் இன்றி ஊர்காவற்றுறை நகரம் வெறிச்சோடியுள்ளது.

கடந்த இருபது நாட்களுக்கு மேலாக தீவுப் பகுதிக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது, இதனால் தீவுப் பகுதி இருளில் மூழ்கியுள்ளது. (24 கி)

### வந்தோரை வரவேற்கும் தென்மராட்சி

பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து சாவகச்சேரிப் பகுதிக்கு இடம்பெயர்ந்து வருவோரின் தொகை நாளுக்குநாள் அதிகரித்த வண்ணமுள்ளது.

நேற்று முன்தினம்வரை 8264 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் முப்பத்தையாயிரம் பேர் இப்பகுதிக்கு வந்துள்ளதாக சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் அலுவலக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இம்மாதம் முதலாம்திகதியிலிருந்து ஐந்தாம் திகதிவரை 3100 குடும்பங்களைச் சேர்ந்த பன்னீராயிரம்பேர் இப்பகுதிக்கு வருகை தந்துள்ளதாகவும் இத்தொகை மேலும் அதிகரிக்கலாமெனவும் உதவி அரசாங்க அதிபர் பு.சுந்தரம்பிள்ளை [illegible]

### இவற்றுக்கு இப்போது கிராக்கி

சீனி தட்டுப்பட்டால் இப்போது கற்கண்டு, சர்க்கரை, வெல்லம் போன்றவற்றிற்கு பெரும் கிராக்கி ஏற்பட்டு வருகின்றது.

இந்நிலையை பயன்படுத்தி வர்த்தகர்கள் சர்க்கரையில் கலப்படம் செய்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சர்க்கரையின் விலை 36/- ரூபாவிலிருந்து அதற்கு மேலும் விற்பனை செய்யப்படுகின்றது. (68 கி)

### நோயாளர் ஊழியர் அதிகரிப்பு

(சங்கானை)

சங்கானை அரசினர் வைத்திய சாலையில் நோயாளர் தொகை மிகவும் அதிகரித்துள்ளது.

இடம் பெயர்ந்து வந்த இப் பகுதிகளில் தஞ்சமடைந்துள்ள மக்களும் இங்கு சிகிச்சை பெற வருவதால் வெளி நோயாளர் பிரிவிலும், வாட்டுகளிலும் நோயாளர்கள் தினமும் அதிகளவில் காணப்படுகின்றனர்.

இத்தேவேளை யாழ்ப்பாணம் அரசின்ர் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றிய டாக்டர்கள் தாதிகள் மற்றும் சிற்றூழியர்களில் ஒரு பகுதியினர் இவ் வைத்தியசாலையில் தற்காலிகமாக கடமையாற்றி வருகின்றனர். (13கி)

### இதுவும் இப்போது தட்டுப்பாடு

மக்கள் பரவலாகப் பதுங்கு குழிகளை அமைப்பதால் தற்போது வெற்று உரப் பைகளுக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுவருகின்றது.

உரப்பைகள் முன்னர் இரண்டு ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டது.

தற்போது இதன் விலை பதினைந்து ரூபா வரை அதிகரித்துள்ளது. இதற்காக மக்கள் வெகு தூரம் சென்று வாங்கி வருகின்றனர். (68கி)

### திருமலையில் மீண்டும் சிங்களவர்

திருகோணமலைப் பகுதியை நோக்கி மீண்டும் சிங்களவர் செல்ல ஆரம்பித்திருப்பதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சில பகுதிகளிற் சிங்களக் குடியேற்ற வாசிகளுக்கு இராணுவத்தினர் பாதுகாப்பு வழங்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (கி)

### மடு அகதிகள் இடம் பெயர்வு

மடு மாதா தேவாலயத்திலும், அதை அண்டிய பகுதிக்ளிலும் தஞ்சமடைந்திருந்த அகதிகள் பலர் அங்கிருந்து வேறு பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம் பெயர்ந்து வருகிறார்கள்.

முள்ளிக்குளம், கொண்டச்சி, முருங்கன், வவுனியா, அடம்பன் போன்ற பகுதி மக்களே மடுவில் அகதிகளாகத் தங்கியிருந்தனர்.

இவர்களில் பலர் தற்பொழுது சேரதீவு ஊடாக யாழ். மாவட்டத்தை நோக்கி வந்துள்ளனர்

மடுப் பகுதியில் பாதுகாப்பற்றநிலை ஏற்பட்டுள்ளதையடுத்தே இவர்கள் வேறு பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம் பெயர்வதாகத் தெரி[illegible] (64.கி)

# மூதூர் கடும் மோதலில் 40 கமாண்டோக்கள் பலி

மூதூரில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவமொன்றில் நாற்பது இராணுவ கமாண்டோக்கள் ஒரேயடியாகக் கொல்லப்பட்டதை அரசாங்கம் தற்பொழுது ஒத்துக் கொண்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் திருமலை கடற்படைத்தளத்திலிருந்து, கடற்படையினரின் பீரங்கிப்படகொன்றில் சென்ற நாற்பது இராணுவ கமாண்டோக்கள் மூதூரில் தரையிறங்க முற்பட்டனர்,

அச்சமயம் அங்கிருந்த விடுதலைப்புலிகள் எதிர்த்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் தரையிறங்க முற்பட்ட நாற்பது கமாண்டோக்களும் ஒரேயடியாகக் கொல்லப்பட்டிருந்தனர். சில தினங்களின் பின்னர் இச்சம்பவத்தை அரசு தற்பொழுது ஒத்துக்கொண்டிருக்கிறது.

இதேவேளை திருமலையில் மீண்டும் மோதல்கள் ஆரம்பமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வெருகல், ஈச்சலம்பற்றை, சாம்பல்தீவு ஆகிய கிராமங்களிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்து கோவில்களிலும், பள்ளிகளிலும் தஞ்சம் அடைந்துள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

கடலிலிருந்து கடற்படையினர் பலமான பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர். பலமான விமானக்குண்டு வீச்சும் இடம் பெற்றது. (கி)

## யாழ். முஸ்லிம் மக்கள் பாதுகாப்பை நாடுகிறார்கள்

யாழ். மாவட்டத்திலுள்ள பெரும்பாலான முஸ்லிம்கள் தனியார் மினிபஸ்களிலும், லொறிகளிலும் தினமும் பிரதான வீதியூடாக தென்பகுதியை நோக்கிச் செல்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

கடந்தகாலங்களில் கோட்டையிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல்தாக்குதல்களின் போது முஸ்லிம் பகுதியில் பலர் உயிரிழந்தும், கட்டிடங்கள் சேதமடைந்தும் இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு இடம்பெயர்ந்து செல்வோரில் பலர் அனுராதபுரத்தில் தஞ்சம் அடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ப 3 கி)

## தீவுப்பகுதிக்கான உணவுப்பொருளை சேமிக்க யாழ். நகரில் களஞ்சியம்

தீவுப்பகுதி மக்களின் உணவுத் தட்டுப்பாடுகளை போக்குவதற்கு யாழ். குடாநாட்டிலுள்ள ப. நோ. கூ. சங்கங்களில் உணவுப் பொருட்களை களஞ்சியப்படுத்தி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஒரு மகாநாடு நல்லூர் ப. நோ. கூ. சங்கத்தில் நடைபெற்றது. யாழ். குடாநாட்டிலுள்ள ப. நோ. கூ. சங்கங்களின் தலைவர்கள். பொது முகாமையாளர்கள் கலந்து கொண்டனர்.

தற்போது பண்ணை வீதி வழியாக தீவுப்பகுதிக்கு பொருட்களை வாகனங்களில் எடுத்துச்செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதை அடுத்தே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (6 கி)

## சோதனை மேல் சோதனை

## உயிர்தப்பி ஓடி வருவோரை கைது செய்யும் இராணுவம்

திருமலையிலிருந்து படகு மூலம் முல்லைத்தீவை நோக்கி வருவோரை இடைவழியில் இராணுவத்தினர் இடைமறித்து துன்பப்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புடவைக்கட்டுக்கும், முல்லைத்தீவுக்கும் இடையில் சோதனை என்ற பெயரில் இந்தத் துன்புறுத்தல் இடம் பெறுகின்றதாம்.

சோதனையிடும் இராணுவத்தினர் படகில்வரும் இளைஞர்களைக் கைது செய்வதாகவும், பெண்களிடம் தங்க நகைகளைக் கப்பமாகக் கேட்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (64 கி)

## உலககிண்ண உதைபந்தாட்டம்

## மே.ஜேர்மனி சாம்பியன்; கிண்ணமும் சொந்தமானது

உலகெங்கும்உள்ளபலகோடி உதைபந்தாட்ட ரசிகர்கள் வெகு ஆவலுடன் எதிர்பார்த்திருந்த 'இத்தாலிய 90' உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் இத்தாலியின் தலைநகரமான றோமில் நடைபெற்ற பொழுது, மேற்கு ஜேர்மனி, ஆட்டம் முடிவடைவதற்கு 5 நிமிடங்கள் மாத்திரம் இருக்கையில் ஒரு கோலைப் போட்டு ஆர்ஜன்ரீனா அணியை ஒன்றிற்கு பூச்சியம் என்ற கோல் கணக்கில் தோற்கடித்து 14-வது உலகச் சாம்பியன் ஆனது.

மேற்கு ஜேர்மனி 1954-ம் 1974-ம் ஆண்டுகளிலும், இம்முறையுமாக மூன்று தடவைகள் வெற்றியீட்டியுள்ளமையினால், அவர்களுக்கு இம்முறை வழங்கப்பட்ட வெற்றிக் கிண்ணம் அவர்களுக்கே சொந்தமாகிறது.

இவ்விதம் 1934, 1938-1982-ம் ஆகிய ஆண்டுகளில் இத்தாலியும், 1958, 1962, 1970 ஆகிய ஆண்டுகளில் பிரேசிலும் 3 தடவைகள் வெற்றி பெற்றமையினால் தங்கக் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டமை நினைவு கூர வேண்டியதொன்றாகும்.

1930-ம் ஆண்டு ஆரம்பமாகி 4 வருடங்களுக்கு ஒரு முறையாக நடந்து முடிவுற்ற 14 போட்டிகளில் சாம்பியன்களான நாடுகளின் விபரம்:-

1. 1930 உருகுவே, 2. 1934 இத்தாலி, 3. 1938 இத்தாலி, 4. 1950 உருகுவே, 5. 1954 மேற்கு ஜேர்மனி, 6. 1958 பிரேசில், 7. 1962 பிரேசில், 8. 1966 இங்கிலாந்து, 9. 1970 பிரேசில் 10. 1974 மேற்கு ஜேர்மனி, 11 1978 ஆர்ஜன்ரீனா 12. 1982 இத்தாலி, 13. 1986 ஆர்ஜன்ரீனா, 14. 1990 மேற்கு ஜேர்மனி. (16 கி)

## பயிலுநர் ஆசிரியர் கூட்டம்

நல்லூர் உ.அ. அதிபர் பிரிவைச் சேர்ந்த சகல பயிலுநர் ஆசிரியர்களையும் 11-ம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் நல்லூர்க்கிளை பயிலுநர் ஆசிரியர்சங்கக்கூட்டத்தில்தவறாது கலந்து கொள்ளும்படி பயிலுநர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.


தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

**கலந்துரையாடல்**

காலம்: 12. 07. 1990-ம் திகதி வியாழக்கிழமை
காலை 9.00 மணி.
இடம்: தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மண்டபம்
தலைவர்: திரு. சி. சிவமகாராசா,
தலைவர், தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்.

கலந்துரையாடல் விடயம்

1. சங்கக்கிளைகளின் பாதுகாப்பு
2. உணவுப்பற்றாக்குறை. பங்கீட்டுமுறை. விநியோக ஒழுங்குமுறை.
3. அத்தியாவசிய உணவுப் பொருள் கொள்வனவுக்கு உதவுதல்.
4. தடைகள், வசதிக்குறைவுகள் மத்தியிலும் உணவு உற்பத்தி செய்தல், ஊக்குவித்தல், உதவுதல்.

தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கிளைக்குழு நெறியாளர் குழு, மகளிர்குழு - உறுப்பினர்கள், சங்கப்பணியாளர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சி. முருகையா
செயலாளர்.
தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்

தெல்லிப்பளை.
05. 07. 1990.

07004

தமிழர் ஒன்றியம் சர்வதேச சமுதாயத்திடம் கோரிக்கை:

# 'தமிழரைக் காக்க உடன் தலையிடுங்கள்'

''இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படுவது உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.''

இந்த விடயத்தில் உடனடியாக சர்வதேச சமுதாயம் தலையிடவேண்டும்.

இவ்வாறு அவுஸ்திரேலியாவில் இயங்கிவரும் தமிழர் ஒன்றியம் அவசர கோரிக்கை விடுத்துள்ளது.

சர்வதேச சமுதாயம் இது தொடர்பாக இலங்கை அரசைக் கோரவேண்டுமெனவும் தமிழர் ஒன்றியம் கேட்டுள்ளது.

இதேவேளை இலங்கையில் உடனடியாக யுத்த நிறுத்தம் செய்யப்படல் வேண்டுமெனத் தமிழர் விடுதலைக் கூட்டணி கேட்டுள்ளது.

இந்த யுத்த நிறுத்தம் ஏற்படும் பட்சத்தில் அது சரியான முறையில் அமுல் செய்யப்படுகின்றதா என்பதைக் கண்காணிக்க ஐக்கிய நாடுகள் சமாதானப் படை அல்லது பொது நலவாய சமாதானப்படையை இங்கு அனுப்ப வேண்டுமெனவும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இதேபோன்று உலகின் பல்வேறு பகுதிகளில் இயங்கிவரும் தமிழர் அமைப்புக்களும் இலங்கைத் தமிழரைப் படுகொலையிலிருந்து காக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு சர்வதேச அமைப்புக்களைக் கோரியுள்ளன. (கி)

## ஷெல் தாக்குதலினால் மாங்குளம் வைத்தியசாலை பலத்த சேதம்

(சங்கானை)

மாங்குளம் இராணுவ முகாமுக்கு மிகவும் சமீபத்திலமைந்துள்ள மாங்குளம் அரசாங்க வைத்தியசாலை ''ஷெல்'' தாக்குதல்களினால் பலத்த சேதமடைந்துள்ளது.

வைத்தியசாலை தொடர்ந்து இயங்க முடியாத நிலையில் இருப்பதால் வைத்தியசாலை ஊழியர்கள் வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்து சென்றுள்ளனர்.

இவ் வைத்தியசாலை. பொறுப்பதிகாரி டாக்டர் எஸ். திருச்சிற்றம்பலம் இடம் பெயர்ந்து வந்து பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலையில் தற்காலிகமாக கடமையாற்றி வருகின்றார்

## வவுனியாவில் 8 இராணுவம்பலி

வவுனியா பறையன் குளத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் எட்டு இராணுவத்தினர் பலியானதாக அரசு அறிவித்துள்ளது. காயமடைந்தோர் பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (கி)

## மட்டக்களப்பு வீதிகளில் எரிந்தநிலையில் சடலங்கள்

மட்டக்களப்பில் பல இடங்களிலும் எரிந்தநிலையில் பல சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகச் செய்திகள்தெரிவிக்கின்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டும் இத்தகைய எட்டு சடலங்கள் மீட்கப்பட்டன.

இவற்றுள் நான்கு சடலங்கள் மட்டக்களப்பு ஆசிரியக் கலாசாலைக்கு முன்பாகக் காணப்பட்டன.

இதேபோன்று கடந்த செவ்வாய்க்கிழமை மட்டு நகரில் ஐந்துசடலங்கள் எரிந்த நிலையில் மீட்கப்பட்டன. (கி)

## மாணவர் பொதுக்கூட்டம்

யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கான பொதுக்கூட்டம் வருகிற 11-ம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெற உள்ளது. சகல மாணவர்களையும் சமுகம் தருமாறு பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

## யாழ். பல்கலைக்கழக மாணவர் நிவாரண பணியில் தீவிரம்

திருகோணமலை, மட்டக்களப்பு, கிளிநொச்சி ஆகிய பல்வேறு இடங்களில் இருந்து இடம் பெயர்ந்து, உடுத்த உடுப்புடன், அகதிகளாக யாழ். வந்து மாற்றுவதற்குக் கூட எந்தவித துணியும் இல்லாமல் அவதிப்படுவோருக்கு கொடுத்து உதவுவதற்காக கடந்த ஒரு வாரகாலமாகப் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் உடுபுடவைகளை சேகரித்து வருகின்றனர்.

இவ்விதம் சேகரிக்கப்பட்ட உடுப்புகளில் கணிசமான ஒரு தொகை உடுப்புக்கள் முல்லைத்தீவில் தங்கியுள்ள அகதிகட்கு வழங்கப்படுவதற்காக பல்கலைக்கழக மாணவத் தொண்டர்களினால் சென்றவாரம் முல்லைத்தீவிற்குகொண்டுசெல்லப்பட்டது

யாழ்ப்பாண மக்கள் முகம் சுளிக்காமல் தம்மிடம் உள்ள பழைய துணிகளுடன் புதுத் துணிகளையும் தாராளமாக கொடுத்து உதவுவதாக இச் சேவையில் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவித்தனர். மேலும் அவர்கள் சுண்டிக்குளிப் பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொழுது தமக்கு ஏற்பட்ட புதுமையான ஆனால் கசப்பான ஓர் அனுபவத்தையும் குறிப்பிடத் தவறவில்லை.

பிரபல மகளிர் கல்லூரி ஒன்றில் ஆசிரியையாக கடமையாற்றும் சமூகசேவகி ஒருவர் வீட்டிற்கு நாங்கள் சென்றிருந்த பொழுது அந்த ஆசிரியை எமக்கு ஏதும் துணிமணிகளை கொடுக்க மறுத்ததும் அல்லாமல் ''நான் யாழ்ப்பாணத்தில் உள்ள அகதிமுகாம்கள் எல்லாவற்றிற்கும் சென்றிருக்கிறேன் எந்தவொரு அகதிமுகாமிலாவது அகதிகள் உடுத்த உடையின்றி அல்லல்படுவதை நான் காணவில்லை. மாணவர்களாகிய நீங்கள் உங்கள் நேரத்தை இபடி உபயோகமற்ற செயல்களில் வீணடிப்பதிலும் பார்க்க, உருப்படியான காரியம் எதையாவது செய்யலாமே என்றுஎமது சேவையை கொச்சைப்படுத்தி ஒரு குட்டிப் பிரசங்கமே செய்து முடித்தார். (16-கி)

உ

## நாகதீப நாகபூசணியே!



மூன்று இனமும் கொள்ளை, கொலை செய்யாத வரம் வேண்டும்.

07005


கோட்டை கட்டும் செயற்பாடு வருடத்தில் ஒன்பது மாதங்களுக்கே நடந்தது. மழை பெய்யத் தொடங்கியதும் கோட்டை கட்டுகின்ற வேலை நிறுத்தப்படும். கோடை காலத்தில் ஏற்பட்ட வைசூரியும் மாரி காலத்தில் ஏற்பட்ட பேதிநோயும் சில வேளைகளில் கோட்டை கட்டுவதைத் தடைசெய்தன. எனினும், யாழ்ப்பாணக்கோட்டை' 1625-ஆம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்டது.

போர்த்துக்கேயரால் கட்டப்பட்ட யாழ்ப்பாணக் கோட்டை இன்று இருக்கின்ற கோட்டை போன்று நட்சத்திர வடிவத்தினையுடைதன்று, சதுரவடிவக்கோட்டையாகும். அக்கோட்டையின் நான்கு மூலைகளிலும் நான்கு கொத்தளங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அக்கொத்தளங்கள் அரைச் சந்திர வடிவ மதில்களால் இணைக்கப்பட்டிருந்தன. அக் கோட்டை மதில் அடித்தளத்தில் பதினாறு அடிகள் தடிப்புள்ளனவாயும் இருபதடிகள் உயரமுள்ளனவாயும் நான்கு அடிகள் உச்சித்தடிப்புள்ளனவாயும் விளங்கின. மதில் சுவர்களின் இடைத்தூரத்து உச்சிகளில் காவலரண்கள் அமைக்கப்பட்டிருந்தன.

கோட்டையின் நான்கு கொத்தளங்களிலும் பீரங்கிகள் பொருத்தப்பட்டிருந்தன. கடற்புற இரு கொத்தளங்களிலும் 24 இறாத்தல் நிறையுள்ள குண்டுகளை வீசக்கூடிய பாரிய பீரங்கிகளும், தரைப்புறக் கொத்தளங்களில் 3, 4 இறாத்தல் நிறைகளையுடைய குண்டுகளை வீசக்கூடிய சிறிய பீரங்கிகளும் பொருத்தப்பட்டிருந்தன

போர்த்துக்கேயரின் யாழ்ப்பாணக் கோட்டை மூன்று பக்கங்களிலும் கடலால் சூழப்பட்டிருந்தது. கோட்டை மதிலோடு கடல் நீர் வந்து நிற்கக்கூடியதான அகழிப் பள்ளங்களை அவர்கள் வெட்டியிருந்தனர். இன்றிருப்பது போன்ற அகழிகளல்ல. தரைப்புறப் பககத்தில் அவ்வாறான அமைப்பு இருக்கவில்லை. ஆனால் துப்பாக்கிகள் ஏந்திய மலபார் வீரர்களால் அரண் செய்யப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணக் கோட்டைக்குள் 150 பறங்கி வீரர்களைக்கொண்ட மூன்று பட்டாளங்கள் இருந்தன. ஒவ்வொரு வீரனுக்கும் அவன் கலியாணமாகதவனாக இருந்தால் மாதம் ஒன்றுக்குப் பன்னிரண்டு பணமும், கலியாணமா



## களம் பல கண்ட யாழ். கோட்டை (3)

கியவனாகவிருந்தால் மாதமொன்றிற்கு 24 பணமும் வழங்கப்பட்டன. அவசியமான காலங்களில் தேவைப்படும் உணவுப்பொருள்கள் கோட்டைக்குள் வேண்டிய மட்டும் சேரிக்கப்பட்டு வைக்கப்பட்டன.

உயரதிகாரிகளுக்குரிய வீடுகள், வீரர்கள் தங்குவதற்கு வேண்டிய தொடர் இருப்பிடங்கள், களஞ்சியங்கள், ஆயுதசாலைகள் என்பன அங்கிருந்தன. ஒரு கிறிஸ்தவ தேவாலயமும் அதனுள் இருந்தது. கோட்டைக்குள் எப்பொழுதும் 300 கண்டி நெல்லும் அரிசியும் சேமித்து வைக்கப்பட்டிருந்தது. அறுவடைக் காலங்களில் சேமிக்கப்பட்டு, வருட முடிவில் விற்கப்பட்டு, பின் புது நெல்லும் அரிசியுமாக வாங்கி வைக்கப்பட்டன. அவ்வாறு சேமித்து வைப்பதற்கு பந்தாயம் எனப்படும் நெற்கூடைகளைப் பயன்படுத்தினர்.

போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தில் கட்டிய கோட்டை போன்று வேறு பகுதிகளிலும் கோட்டைகளைக் கட்டியுள்ளனர். மன்னார், ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை, பருத்தித்துறை, மட்டக்களப்பு, வெற்றிலைக்கேணி முதலான பகுதிகளிலும் இவர்கள் கோட்டைகளை அமைத்தனர். ஆனால் அவை யாழ்ப்பாணக் கோட்டை போன்று பாரியனவல்ல.

போர்த்துக்கேயரின் யாழ்ப்பாணக் கோட்டை, முதன் முதல் கண்டி அரசன் செனறத் என்பவனால் தாக்கப்பட்டது. கண்டியரசனின் மகன் இராஜசிங்கன் யாழ்ப்பாணத்து அரசகுமாரி ஒருத்தியை மணந்திருந்தான். அதனால் யாழ்ப்பாண இராச்சியத்தில் தனக்கு உரிமையுள்ளதெனப் பாராட்டி. பெரும் படையொன்றினை யாழ்ப்பாணத்தை மீட்க அனுப்பி வைத்தான்.

அவ்வாறு வந்த சிங்களப்படை பச்சிலைப்பள்ளியில் கிறிஸ்தவத் தேவாலயம் ஒன்றினைத் தரைமட்டமாக்கியதோடு, அங்கிருந்த இரு குருமாரையும் கொலை செய்தது. யாழ்ப்பாணத்திற்கு வந்து இங்கிருந்த பல கிறிஸ்தவ தேவாலயங்களை எரித்ததோடு யழ்ப்பாணக் கோட்டையையும் முற்றுகையிட்டது. அவ்வேளை, யாழ்ப்பாணக் கோட்டையின் கப்பித்தானாக லாங்றோட்தே செயிக்ஸாஸ் காபிறேரா என்பவன் இருந்தான்.

1629 ஆம் ஆண்டு இந்த முற்றுகை இடம் பெற்றது. சிங்களப்படைகள் 13 நாட்கள் இம்முற்றுகையைச் செய்தன. கோட்டைக்குள்ளிருந்த போர்த்துக்கேயக் கப்பித்தான். பறங்கிப்படையின் வலிமை காணாதெனக்கண்டு எதிர்த்துத் தாக்காது இருந்தான். கண்டியரசனின் படை யாழ்ப்பாணத்திற்குப் புறப்பட்டுவிட்டதென்ற செய்தியை அறிந்த கொழும்புத் தேசாதிபதி கொன்ஸ் தான்தினோ பெரும் படையொன்றினை, தொமிங்கு கர்வல்லோ சாவ் என்பவனின் தலைமையில் உடன் அனுப்பி வைத்தான். அவை கப்பல்வழி வந்து யாழ்ப்பாண்க் கரையில் இறங்கி முற்றுக்கையிட்டிருந்த சிங்களப்படையை நிர்மூலமாக்கின. சிறைப்பட்டோர் மிகக் கொடூரமாகக் கொல்லப்பட்டன[illegible] மைகளாக விற்கப்பட்ட[illegible]

பிரச்சினைக் காலத்தில்

# வேதனம் இல்லை எனும் கைவிரிப்பால் வேதனை

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையில் கடமையாற்றும் அமய, ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களுக்ககு பிரச்சினைக் காலத்தில் சம்பளம் வழங்கப்படமாட்டாது என நேற்று நடைபெற்ற சந்திப்பில் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்துஇவ் வூழியர்கள் கடும் ஆட்சேபனை தெரிவித்துள்ளனர்.

இப்பிரச்சினை தொடர்பாக மேற்படி ஊழியர்கள் வடபிராந்தியப் போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. எஸ். கனகரத்தினத்தைச் சந்தித்து நிரந்தர ஊழியர்களுக்குக் கிடைக்கும் சலுகைகள் தமக்கும் கிடைக்க வேண்டும் எனவும் யூன் மாதம் 19ம் திகதியில் இருந்து தமக்குச் சம்பளம் வழங்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டனர்.

இது தொடர்பாக இன்று பதிலளிப்பதாகத் தலைவர் தெரிவித்தார்.(ப-12-ஸ்ரீ)

யாழ். பல்கலைகழக மாணவர் ஒன்றியம்

# கைதான மாணவர்களை விடுவிக்க முயற்சி

கடந்த 14-6-90 அன்று கிழக்கு பல்கலைக்கழகத்திலிருந்து யாழ். நோக்கி புறப்பட்ட மாணவர்கள் தொடர்பாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமானது யாழ். பல்கலைக்கழக உபவேந்தருடாக இரு தடவைகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் தொடர்பு கொண்ட போதிலும் இதுவரை எதுவித பதிலும் எமக்கு கிடைக்கவில்லை என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது,

பிறமாவட்டங்களில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ள யாழ்.பல்கலைக்கழக, மற்றும் பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த மாணவர்கள் பற்றிய விபரங்களையும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் கோரியிருந்தும் எதுவித விபரங்களும் அறிவிக்கப்படவில்லை.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இம் மௌனமானது மிகுந்த மன வேதனையையும், அச்சத்தையும் அளிக்கின்றது. எனினும் தொடர்ந்தும் மானியங்கள் ஆணைக்குழுவுடன் தொடர்பு கொண்டு தகவல்களை பெற முயற்சி செய்து கொண்டிருக்கின்றோம் என மாணவர் ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

# பொதி போடும் படலம் நேற்றும் தொடர்ந்தது

நேற்று யாழ் நகரில் ஹெலி ஒன்று துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டது கோட்டை இராணுவ முகாமுக்கு உணவுப் பொதிகள் போட முனைந்த வை 8 விமானத்திற்கு உதவியாகவே ஹெலி இத்தாக்குதலை நடாத்தியது.

இருபாலைப்பகுதியிலும் யாழ் கோட்டையைச் சுற்றியுள்ள பகுதியிலுமே இந்த ஹெலி தாக்குதலை நடாத்தியது. பொதுமக்கள் பதற்றமடைந்த போதும் எவருக்கும் காயமேற்படவில்லை.

உணவுப்பொதிகள் போட்டவை 8 ரகவிமானம் சற்றுத் தாழ்வாகப் பதிந்து பொதிகளைப் போட்டது.

கடலை நம்பி வாழ்ந்தோர் குடல் வாடுகிறது

# 30 ஆயிரம் மீனவர் வாழ்வில் இடர் சூழ்ந்தது

யாழ். குடாநாட்டின் கடற்கரைப் பிரதேசங்களில் தொடர்ந்துவரும் பதற்ற நிலை காரணமாகபல்லாயிரக் கணக்கானமக்கள் தினமும் இடம்பெயர்ந்த வண்ணமுள்ளார்கள்.

சுமார் முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் முழுமையாகப் பாதிப்படைந்துள்ளதாகத்தெரிவித்துள்ளது இவர்களது தொழில்கள் யாவும் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

அத்துடன் கடற்கரைக்கு அண்மையில் வசிக்கும் இருபதினாயித்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் தமது வீடுகளை விட்டுவெளியேறியுள்ளார்கள் தொடர்ந்தும் வெளியேறியபடியுள்ளார்கள்.

ஸ்ரீ லங்கா கடற்படையினரின் பீரங்கிப்படகுத் தாக்குதல்களினால் கடற்கரையில் இருந்து மூன்றுமைல்களுக்குட்பட்ட வீடுகள் பல சேதமடைந்து வருகின்றன அத்துடன் கரையோரங்களில் நிறுத்தப்பட்டுள்ள படகுகளும்சேதமடைந்து வருகின்றன.

தொடர்ந்து வரும் பதற்ற நிலைகளினால் மேலும் பல பொதுமக்கள் நாள் தோறும் இடம் பெயர்ந்து வருகின்றார்கள். (03-ஸ்ரீ)

# கொலைபாதகம்; சிறுவர்கூட தப்பவில்லை என அறிவிப்பு

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள வீரமாநகர் என்னும் கிராமத்தில் குழந்தைகள் உட்பட 35 தமிழ் பேசும் மக்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளதாக விடுதலைப்புலிகள்செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

ஊர்காவற்படையினர் நடாத்திய இந்தக் கொலைச் சம்பவத்தில் நான்கு ஐந்து வயதிற்குட்பட்ட பல சிறுவர்கள் கூடகோரமாக வெட்டி கொலை செய்யப்பட்டதாக அச்செய்திக் குறிப்பு மேலும் தெரிவிக்கின்றது.(03 ஸ்ரீ)

## இந்தியா விளக்கம் கேட்கிறது

விடுதலைப் புலிகளுடன் இனி பேச்சு என்றால் அது வெளிநாடுகளின் உதவியுடன் தான் தடக்கும் என்ற ஜனாதிபதி பிரேமதாஸாவின் கூற்றுக்கு இந்தியா இலங்கை அரசிடம் விளக்கம் கோரியுள்ளதாக இந்திய வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

### மக்களாதரவின்...

குதலை ஆரம்பித்துள்ளோம்"

எம்மிடம் சரணடைந்த பொலிஸர் எவரையும் நாம் கொல்லவில்லை பொலிஸ் நிலைய முற்றுகையின் போது மட்டும் தான் பொலிஸார் கொல்லப்பட நேர்ந்தது. சரணடைந்தவர்களை கொல்லவில்லை எனக் கரிகாலன் குறிப்பிட்டார்.

விமானத்தாக்குதல்குறித்து கருத்து வெளியிட்ட அவர் 'விமானங்கள் மூலம் எமது போராட்டத்தை நசுக்க முடியாது. இந்தியப்படைகள் கூட எம்மீது விமானத்தாக்குதலை நடாத்தின. எமக்கு மக்கள் ஆதரவு இருக்கும் வரை எதன் மூலமும் எம்மை நசுக்க முடியாது எனக் குறிப்பிட்டார்.

போர் நிறுத்தம் ஏற்படச் சாத்தியம் உண்டா? என பி.பி.ஸி நிருபர் கேட்ட போது இப்படியான விடயங்கள் குறித்த முடிவை நாம் கூறமுடியாது. இது மேல்மட்டங்களில் எடுக்கும் முடிவாகும் எனக் கரிகாலன் குறிப்பிட்டார். (து-ஸ்ரீ)

### குடாநாட்டு ..

த்துறை, ஓட்டுமடம், தட்டாதெரு, நல்லூர் ஊடாகவும் நடைபெறுகின்றன.

நாளையில் இருந்து ஆரம்பமாகும் சேவைகளான தெற்குப் புன்னாலைக்கட்டுவன் (764); கந்தர்மடம் நல்லூர் ஊடாகவும் மாதகல் (787) :ஓட்டுமடம் ஐந்துசந்திஆனைப்பந்தி ஊடாகவும் மாவிட்டபுரம் அரசடிசந்தி (769) தெல்லிப் பழைச் சந்தி கே.கே.எஸ், வீதி மனோகராச்சந்தி நல்லூர் ஊடாக நடைபெறும்

சகல மினிபஸ் களையும் முத்திரைச்சந்தியில் இருந்தே தமது சேவைகளை ஆரம்பிக்கும் படியும் அகதிகள் மற்றும் இடம்பெயர்ந்து வருவோருக்கு இலவசமாகவோ குறைந்த கட்டணத்திலோ பயணம் செய்ய அனுமதிக்க வேண்டுமென்றும் வடபிராந்திய மினிபஸ் போக்குவரத்துச் சங்கம் கேட்டுள்ளது.(3)

### இந்திய ..

தெரிவிக்கையில் ''இது இலங்கையின் உள்நாட்டு விவகாரம் மாத்திர மல்ல இந்திய அரசு இதில் தலையிட்டு தமிழர் படுகொலையைத் தடுத்து நிறுத்த வேண்டும்'' என்று தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)

### தடைகளைத்...

முன்னேறுகிறது எனவும் அறிவிக்கப்படுகிறது.

பல திசைகள் ஊடாக இம் முன்னேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் சொல்லப்பட்டது.

கொழும்பில் வெளிநாட்டு ராஜதந்திரிகள் மத்தியில் மேற்கண்ட தகவல்களை திரு. ரஞ்சன் விஜயரத்ன வெளியிட்டார்,

### இந்தியாவுக்கு ..

வதந்திகளினாலே கூடியளவு மக்கள் பேசாலைப்பகுதியூடாக இந்தியாவுக்கு செல்வதற்காக வெளியேறுவதாக தெரிவிக்கப்படுகின்றது.(3)

### தமிழர்...

படுவதை இந்தியா விரும்பவில்லை அங்கு தமிழர்கள் இடருறுவதையும் ஏற்பதற்கு இல்லை'' என்றும் சொன்னார். அவர். ஸ்ரீ

### லட்சக்...

பௌத்த பிக்குகளும் இது விடயத்தில் அந்த ஆர்வம் காட்டி வருவதாகவும் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.(ஸ்ரீ

### கப்பல்...

தமிழக அரசு இவ்வகதிகளைப் பல்வேறு மாவட்டங்களிலும் தங்கவைக்கத் துரித நடவடிக்கை மேற் கொண்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஸ்ரீ)

### உயிரோடு ...

கள் முஸ்லிம்கள் மீதா இனப் படுகொலையை தொடர்ந்து நடத்திவருவ கவும் குற்றம் சாட்டப் டது. இராணுவமும் ஊர் வற் படையினரும். குண் களும் இதனை நடத்தி வதாகவும் குறிப்பிட பட்டது.

இத்தகவல்களை நேற் இந்திய வானொலி வெளிய டது.(ஸ்ரீ)


விடுதலைப் புலிகள் தமிழீழ

Liberation Tigers Of TAMIL EELAM

# தமிழீழ விடுதலைப் புலிகள்

## *Liberation Tigers of Tamil Eelam*

இனவெறி இராணுவத்தின் கொட்டத்தை அடக்க

## இளைஞர்களே தமிழர் இராணுவத்தில் சேருங்கள்!

ஸ்ரீலங்கா இராணுவம் என்பது ஏனைய நாடுகளில் இருப்பது போன்று நாட்டின் இனவிகிதாசாரத்துக்கு ஏற்ப தேர்ந்தெடுத்துச் சேர்க்கப்பட்ட தேசிய இராணுவம் அல்ல. அது தனிச்சிங்கள இராணுவம்.

சிங்களவர்களினால் சிங்களவர்களைப் பாதுகாக்க என அமைக்கப்பட்ட சிங்களவர்களையே கொண்ட இராணுவம், அந்த இராணுவம் இதுவரை எந்த நாட்டுப் படைகளுடனும் போராடவில்லை. தமிழ்பேசும் மக்கள் மீது தான் பல தடவைகள் தாக்குதல்களை நடத்தியிருக்கிறது.

ஸ்ரீலங்கா இராணுவம், தமிழ்பேசும் மக்களைக் கொன்று குவித்திருக்கிறது: தமிழ்பேசும் பெண்களைப் பாலியல் வன்முறைக்குள்ளாக்கியிருக்கிறது. தமிழ்பேசும் மக்களில் ஏராளமானோரை அகதிகளாகவும், அனாதைகளாகவும் ஆக்கியிருக்கிறது தமிழ்பேசும் மக்களின் நிலங்களைச் சிங்களவர்கள் ஆக்கிரமிக்கப் பக்கபலமாகவும் பாதுகாப்பாகவும் இருந்துவருகிறது.

இந்த நடவடிக்கைகளை அதிகப்படுத்தி மேலும் பரவலாக்கி தமிழ்பேசும் இனத்தைப் பூண்டோடு அழிப்பதற்குத்தான் ஸ்ரீலங்கா அரசு புதிதாக இராணுவத்துக்கு ஆட்சேர்க்கிறது; ஆயுதங்களை வாங்குகிறது: மேலதிக செலவினங்களுக்குப் பாராளுமன்றத்தில் ஒப்புதலும் பெற்றிருக்கின்றது.

இளைஞர்களே; இந்நிலையில் சிங்கள இனவெறி இராணுவத்தின் கொட்டத்தை அடக்கத் தமிழரின் அழிவைத் தடுத்து நிறுத்த, தமிழ்பேசும் மக்களின் தேசிய இராணுவமான விடுதலைப்புலிகளின் இராணுவத்தில் உடனடியாக உங்களை இணைத்துக் கொள்ளுங்கள்.

மத்திய குழு, தமிழீழவிடுதலைப்புலிகள்

வெளியீடு: செய்தி வெளியீட்டுப் பிரிவு, விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேட்) லிமிறெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மி பில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 10-7-90 அச்சிட்டு வெளியிடப்பெற்றது,